தமிழ்நாடு சட்டப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2042—தை 25

2011 பிப்ரவரி 8, செவ்வாய்க்கிழமை

சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டம், சட்டமன்றம்-தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்"

சொற்களை அளவறிந்து உரைத்திடும் தூயவர்கள் அவையிலிருப்போரின் வகையறியும் ஆற்றல் உடையவராயிருப்பின் பிழை நேருமாறு பேசமாட்டார்கள்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர்* **திரு. வ. முல்லைவேந்தன், மாண்புமிகு மின்சாரத் துறை** *அமைச்சர் அவர்கள்.*

21—

துணை மின் நிலையம்

***101888—திரு. வ. முல்லைவேந்தன்:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2011 பிப்ரவரி 8

மொரப்பூரில் 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். பெருகிவரும் மின் பளுவைக் கருத்தில் கொண்டு மொரப்பூர் பகுதியில் ஒரு 110 கி.வோ. துணை மின் நிலையம் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொரப்பூரில் 110 கிலோ வோல்ட் மின் நிலையம் அமைப்பதற்கு அரசு அனுமதித்ததற்காக நன்றி தெரிவித்துக்கொள்வதோடு, அந்தப் பகுதியில் மின் தடையில்லாமல், விவசாயிகள் விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் இந்தப் பணி விரைந்து முடிக்கப்படுமா? அதேபோல், மொரப்பூரில் இருந்து 30 அல்லது 40 கி.மீ. தொலைவிலுள்ள பொம்மிடி பகுதியை மையமாகக்கொண்டு ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்களின் வழியாகச் செல்கின்ற மின் கம்பங்களில் இருக்கிற மின் கம்பிகளை ஓரமாகப் போட்டால் அந்தப் பகுதி பாதுகாப்பாக இருக்கும். சில நேரங்களில், மழைக் காலங்கள் அல்லது விபத்துக் காலங்கள் போன்ற சூழ்நிலைகளிலும், பெரும் காற்றின் காரணமாகவும், அந்தக் கம்பிகள் அறுந்து விடுகின்ற அபாய நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் பொது இடங்கள் அல்லது அரசு அலுவலகங்கள், குறிப்பாக பள்ளிக்கூடங்கள் பாதிக்கப்படுகிற நிலை இருக்கிறது. என்னுடைய தொகுதியில் பொம்மிடியில் இருக்கிற பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் அப்படிப்பட்ட நிலை இருக்கிறது. எனவே, அந்தக் கம்பங்களை அகற்ற வேண்டும்; அல்லது ஒதுக்குப்புறமாக இருக்கிறமாதிரி அமைக்க வேண்டுமென்று சொன்னால், shifting charges என்கிற பெயராலே பணம் கட்ட வேண்டும் என்கிற ஒரு நிபந்தனை இருக்கிற காரணத்தால், பொதுமக்களால் கட்டமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட நிலையில் இவற்றையெல்லாம் ஒரு

2011 பிப்ரவரி 8]

தனி நேர்வாகக் கருதி, விதிவிலக்கு அளித்து, துறை மூலமாகவே அவற்றை ஒதுக்குப்புறமாக இருக்கிற மாதிரி அமைப்பதற்கு அரசு முன்வருமா? அல்லது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து இவற்றை அகற்றுவதற்கு அல்லது ஒதுக்குப்புறமாக அமைப்பதற்கு பணம் ஒதுக்குவதற்கு மாண்புமிகு துணை முதல்வரோடு கலந்து பேசி, உள்ளாட்சித் துறை மூலமாக அதற்கான அனுமதியை வழங்க மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கேற்ப, மொரப்பூரிலே 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க அரசு முடிவு எடுத்திருந்தாலும், இன்னும் நிலம் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை. மாண்புமிகு உறுப்பினர் உடனடியாக நிலத்தை வாங்கித் தருவதற்கு ஏற்பாடு செய்வாரேயானால், இந்த ஆண்டே கட்டி முடிக்கப்படும். அடுத்து, இன்னொரு கேள்வியைக் கேட்டார்கள்; 40 கிலோ மீட்டரில் இன்னொரு துணை மின் நிலையம் அமைக்கப்படுமா என்று. தேவையைக் கருதி துணை மின் நிலையம் அமைக்கப்படும். அடுத்து, பள்ளிகளிலும் மற்ற இடங்களிலும் இருக்கக்கூடிய கம்பங்களை அகற்றுவதைப் பற்றிச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, மாண்புமிகு துணை முதல்வர் அவர்களோடு கலந்து பேசி இதுகுறித்து ஆவன செய்யப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.*

திரு. வ. முல்லைவேந்தன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்தமிழ் அறிஞர் கலைஞருடைய ஆட்சியிலே, விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கியதைத் தொடர்ந்து, யாரும் கேட்காமலே தட்டுங்கள் திறக்கப்படும் என்ற அடிப்படையில், "சொன்னதைச் செய்வோம், சொல்லாததையும் செய்வோம்", என்ற நிலையில், 10 ஆண்டுகளுக்கு முன்பாக மின் இணைப்பு வேண்டுமென்று கோரி, மின் இணைப்புக்காகக் காத்திருக்கின்ற விவசாயிகளுக்குப் புதியதாக இரண்டு இலட்சம் மின் இணைப்புகள்*

வழங்கப்படும் என்று கலைஞர் அரசு அறிவித்திருக்கிறது. அதேபோல, பழைய மோட்டார்களை மாற்றி புதிய மோட்டார் வழங்கப்படும் என்றும் அறிவித்திருக்கிறார்கள். இப்போது புதிய மின் இணைப்புகள் வழங்குகிற நிலை எந்த நிலையில் இருக்கிறது; மின் இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றனவா; எப்போது வழங்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு தமிழகத்திலேதான் 10 ஆண்டுகளுக்கு முன்னாலே பதிவு செய்த விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தப் பணி இப்போது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. இந்தப் பணி முடிவதற்கு ஓராண்டுக் காலமாகும். புதிய மின் மோட்டார்கள் வாங்குவதைப்பற்றி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 3 ஸ்டார், 4 ஸ்டார் கொண்ட புதிய மின் மோட்டார்கள் வாங்குவதற்கு ஏற்கெனவே மின்சார வாரியம் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. தேவையான மின் மோட்டார்கள் இப்போது கைவசம் இருக்கின்றன. எனவே, தொடர்ந்து மின் இணைப்பு கொடுக்கப்படும்.*

முற்பகல் 9-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி வாழக்கூடிய பகுதியாகும். அங்கே மின் பற்றாக்குறை இருக்கின்ற காரணத்தினாலே, கொளத்தூரில் 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் அங்கே வந்த நேரத்திலே அறிவித்தார்கள். சட்டமன்றத்திலும் நடப்பு ஆண்டிலே அது தொடங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டு, இப்போது முன்மொழிவும் துறையின் சார்பிலே அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, அவசிய*

2011 பிப்ரவரி 8]

தேவையின் அடிப்படையிலே விரைவாக அதை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். இப்போது இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளெல்லாம் வழங்கப்பட்டிருக்கின்றன. பாலமலையில் இருக்கிற பெரியகுளம் போன்ற பல்வேறு மலைக் கிராமப் பகுதிகளில் மின் இணைப்பே இல்லை. அந்தக் கிராமங்களுக்கு மின் இணைப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு இலட்சம் இலவச மின் இணைப்புகளை வழங்குவதற்கு தாங்கள் பெரிதும் கருணை கூர்ந்து, ஆவன செய்து, அறிவிப்புச் செய்திருக்கிறீர்கள். அதிலே நிபந்தனைகளெல்லாம் விதிக்கப்பட்ட காரணத்தினாலே, விவசாயிகளுக்கு நெருக்கடி ஏற்பட்டு, அந்த நிபந்தனைகளெல்லாம் தங்களாலே தளர்த்தப்பட்டது. அது விவசாயிகளின் மத்தியிலே மிகப் பெரிய வரவேற்பையும் ஏற்படுத்தியது. ஆனால், கீழ்மட்டத்திலே இருக்கிற அதிகாரிகள் நிபந்தனைகள் தளர்த்தப்படவில்லையென்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். நட்சத்திர மின் மோட்டார்கள் வழங்குவதிலேயும் மிகப் பெரிய குளறுபடி இருக்கிறது. நட்சத்திர மின் மோட்டார்கள் வழங்கினால், 500 அடி, 1,000 அடி மற்றும் 800 அடி என்றிருக்கிற ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தண்ணீரை இறைப்பதற்குச் சாத்தியக்கூறுகள் இல்லை; பயன்படாது என்று சொல்கிறார்கள். ஆகவே, விவசாயிகளுடைய கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து நிபந்தனைகளைத் தளர்த்துமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொளத்தூரிலே துணை மின் நிலையம் அமைப்பது பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். 2011-2012-இல் அதை அமைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இரண்டாவதாக, 3 ஸ்டார், 4 ஸ்டார் புதிய மின் மோட்டார்களைப் பயன்படுத்துவதிலே பிரச்சினை இருக்கிறதென்று சொன்னார்கள். அதுகுறித்து 5 பொறியாளர்களுடன் கலந்துபேசி, விவாதித்து, பிரச்சினை வராமல் இருக்கக்கூடிய மோட்டார்களைத்தான் வாங்க வேண்டுமென்று முடிவெடுத்து, அந்த மாதிரி மோட்டார்களைத்தான் வாங்குகிறார்கள். அதிலே ஏதாவது*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பிரச்சினை இருக்கிறதென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அதுபற்றிப் பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. ஓ. பன்னீர்செல்வம்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள், விவசாயிகள் தங்களுடைய மின் மோட்டார்களுக்கு மின் இணைப்பு வேண்டி பதிவு செய்து 10 ஆண்டுகள் முடித்தவர்களுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள் என்ற தகவலை இங்கே தெரிவித்திருக்கின்றார்கள்.

தமிழகத்திலே இதுவரை மின் இணைப்பு கேட்டு பதிவு செய்திருக்கின்ற விவசாயிகள் எத்தனை பேர்? ஒரு விவசாயி பதிவு செய்து 10 ஆண்டுகள் கழித்துதான் மின் இணைப்பு பெறுகின்றார். மின் இணைப்பு வேண்டி பதிவு செய்திருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு, தற்சமயம் பதிவு செய்திருக்கின்றவர்களுக்கு எத்தனை ஆண்டுகளுக்குள் மின்சாரம் தருவதற்கு இந்த அரசால் முடியும்? அதோடுமட்டுமல்லாமல், 2 இலட்சம் விவசாயிகளுக்கு மின் இணைப்பு தருவதாக இங்கே அறிவித்திருக்கிறீர்கள். அதற்கும் சேர்த்து தமிழ்நாட்டில் மின்சார உற்பத்தி இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், கடந்த 5 ஆண்டுகளாகத் தொடர்ந்து மின்சாரப் பற்றாக்குறை நிலவுகின்றபோது, இவற்றையெல்லாம் சரி செய்திருக்கின்ற இந்த அரசு, இதற்காக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதற்குக் காரணம், ஓராண்டுக்கு 40,000 பம்புசெட்டுகளுக்குதான் மின் இணைப்பு கொடுக்கிறோம். அப்படிக் கொடுப்பது என்று சொன்னால், பல ஆண்டுகளாகின்றன. ஏற்கெனவே மின்சார வாரியத்தில் 5 இலட்சம் விவசாயிகள் பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்பு வேண்டுமென்று

2011 பிப்ரவரி 8]

கேட்டிருக்கிறார்கள். அதை விரைவிலே கொடுக்க வேண்டுமென்ற எண்ணத்திலேதான் முதல் முறையாக 2 இலட்சம் பம்புசெட்டுகளுக்கு இந்த ஆண்டே மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முடிவெடுத்திருக்கிறார்கள். அதோடு சேர்த்து, ஆண்டுக்கு 40,000 மின் இணைப்புகள் கொடுக்கப்படும். அப்படியும் மீதி இருக்குமானால், அதுகுறித்து தேர்தல் முடிந்தவுடனே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் கலந்துபேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கழக அரசு தாம்பரம் தொகுதியில், குறிப்பாக, சோழிங்கநல்லூரிலே ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும், 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும், அதேபோல ஈஞ்சம்பாக்கத்திலே ஒரு 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும், அதேபோல மாடம்பாக்கம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையமும், மேற்குத் தாம்பரம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையமும், கோவிலம்பாக்கம் பகுதியிலே ஒரு துணை மின் நிலையமும் இந்த 5 ஆண்டுகளிலே தாம்பரம் தொகுதிக்கு அனுமதி அளித்து, இப்பொழுது திறப்பு விழா நடந்து கொண்டிருக்கிறது. அதற்காக இந்த நேரத்திலே என்னுடைய நன்றியைப் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிலே முக்கியமாக, சிட்லபாக்கம் பகுதிக்கு ஒரு துணை மின் நிலையம் வேண்டும் என்று பல முறை கோரிக்கை வைத்திருக்கின்றேன். அது அரசின் பரிசீலனையில் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, சிட்லபாக்கம் பகுதிக்கு ஒரு துணை மின் நிலையம் அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 ஆண்டு காலத்திலே தமிழகத்திலேயே அதிகமான துணை மின் நிலையங்கள் பெற்ற ஒரு தொகுதி*

[2011 பிப்ரவரி 8

தாம்பரம் தொகுதிதான். அதிலேயும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருப்தி அடையாமல், சிட்லபாக்கத்திற்கு ஒரு துணை மின் நிலையம் கேட்டிருக்கிறார்கள். தேவை இருப்பின், சிட்லபாக்கத்தில் துணை மின் நிலையம் அமைக்க மின் வாரியம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

22—

பலவகை தொழில்நுட்பக் கல்லூரி

***108613—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டூரில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மேட்டூர் தொகுதியில் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி துவக்கும் கருத்துரு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் பகுதி என்பது சேலம் மாவட்டத்தினுடைய மிக முக்கியத்துவம் வாய்ந்த பகுதி. பல்வேறு பள்ளிகள் நிறைந்த பகுதி. தொழிற்சாலைகள், குறிப்பாக, அனல் மின் நிலையம் இருக்கிற பகுதி. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் அந்தப் பகுதியிலேயிருந்து படிப்பதற்கு வெளியூர் செல்லக்கூடிய நிலை இருக்கிறது. பலவகை தொழில்நுட்பக் கல்லூரி என்பது சேலம் மாவட்டத்திலே, மேற்குப் பகுதியிலே இல்லை. அதிலும் குறிப்பாக, மேட்டூர் வட்டம்,

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS